பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 11 வியாழக்கிழமை 24.04.2025 கதிர் 166

### இனி இது ரகசியம் அல்ல!

இன்று தபால் மூல வாக்களிப்புத் தொடங்குகின்றது. தமிழ்க் கட்சிகள் வழக்கம் போலவே கடைசிவரை இருந்துவிட்டு நேற்றுத்தான் அரச அலுவலர்களின் வீடு 2

# பொய்யான வாக்குறுதிகளை வழங்கியோருக்கு கிராம மக்கள் பாடம் கற்பிக்கும் நாளே மே 6

## சஜித் பிரேமதாச எடுத்துரைப்பு

பொய்யான வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றிய திசைகாட்டி ஆளும்தரப்பிற்கு கிராம மக்கள் பாடம் கற்பிக்கும் நாளே மே 6 என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளையும் மக்களின் எதிர்பார்ப்புகளையும் நசுக்கிய திசைகாட்டு ஆளும்தரப்பிற்குப் பதிலளிக்க கிராம மக்கள் காத்திருக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் நாடு சுபமுகூர்த்தத்துடன் அநுரவிடம் ஒப்படைக்கப்பட்டாலும், இன்று நாடு முழுவதும் டாம் பச்சா அரசியல் பரவியுள்ளது என்று பிரேமதாச செவ்வாய்க்கிழமை காலியின் பத்தேகம பகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் உரையாற்றும்போது கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒவ்வொரு தருணத்திலும் மக்களை ஏமாற்றும் ஓர் அரசியல் கலாசாரம் உருவாக்கப்படுகிறது. ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் தொடர்ச்சியாக இரண்டு முறை மக்களை ஏமாற்றிய தலைவர்களிடம் கிராமத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும், மூன்றாவது முறையாக டாம் பச்சாவைப் பிரசங்கிக்க வேண்டும் என்றும் கோருகின்றேன். 2

# 17 மணி நேரமாக கைதிகளின் கட்டுப்பாட்டில் மாத்தறை சிறை

மாத்தறைசிறைச்சாலைக்குள் நிலவிய பதற்றமான சூழ்நிலை சுமார் 17 மணி நேரத்திற்குப் பிறகு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக சிறைச்சாலை அலுவலர்கள் தெரிவித்தனர்.

கைதிகள் கிட்டத்தட்ட 17 மணி நேரம் சிறைச்சாலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

கைதிகளின் கல் வீச்சுத் தாக்குதலில் மூன்று சிறை அதிகாரிகள்காயமடைந்துமாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

மாத்தறை சிறைச்சாலையில் இருந்து அனைத்துக் கைதிகளும் வெளியேற்றப்பட்ட பிறகு, சிறைச்சாலை அதிகாரிகள், காவல்துறையினர் மற்றும் காவல்துறை சிறப்புப் படையினர் நேற்றுப் பிற்பகல் 2.00 மணியளவில் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சிறையில் நடந்த கைதிகள் கலவரத்தின்போது, சிறையில் உள்ள கைதிகளின் உடமைகள் வைக்கப்பட்டுள்ள அறை உடைக்கப்பட்டு அங்கு வைக்கப்பட்டிருந்த அலைபேசிகள், தங்க நகைகள், பணம் என்பன வெளியே எடுக்கப்பட்டுள்ளன என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்திருக்கிறது. எனினும் கைதிகள்சமையலறைக்குள்புகுந்து கத்தி போன்ற ஆயுதங்களைக் கைப்பற்றுவதையும் மருத்துவமனைக்குள் புகுந்து மருந்துகளைத் திருடுவதையும் தம்மால் தடுக்க முடிந்ததாக சிறை அலுவலர்கள் 2

# ஒரு கோடிப் பேர் இதுவரை 'டின்' எண்களை பெற்றனர்

18 வயதுக்கு மேற்பட்ட சுமார் 10 மில்லியன் இலங்கையர்கள் ஏற்கனவே வரி செலுத்துவோர் 2

# துப்பாக்கிச் சூடுகளால் மக்களின் உயிர் வாழும் உரிமைக்கு பாதிப்பு

## முன்னாள் எம்.பி. சரித்த ஹேரத் சுட்டிக்காட்டு

இலங்கையில் சட்டத்துக்குப் புறம்பான துப்பாக்கிச்சூடுகள் 2

# இந்தியாவுடன் இரகசியமாக செய்த ஒப்பந்தங்களை வெளிப்படுத்துங்கள்

## நாமல் ராஜபக்ச வலியுறுத்து

இலங்கை அரசு இந்தியாவுடன் இரகசியமாக செய்துகொண்ட ஒப்பந்தத்தை ஆளும்தரப்பு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை மூடி மறைப்பதற்கு இடமளிக்க போவதில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

சிலாபம் பகுதியில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பரப்புரையின்போது இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

159 பெரும்பான்மை பலம் உள்ளது என்பதால் இந்தஆளும்தரப்புஎதிர்க்கட்சிகளின்கருத்துகளுக்கு மதிப்பளிப்பதில்லை. தன்னிச்சையாக செயற்படுகிறது. பெரும்பான்மை பலம் எம்மிடமும் இருந்தது. ஆகவே அதிகாரம் என்பது நிலையற்றது என்பதை ஆளும்தரப்பு விளங்கிக் கொள்ளவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி தேர்தல் அறிக்கையில் பல வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்கியது. அந்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த முதல் வருடத்திலேயே நிறைவேற்றுவதாக குறிப்பிடப்பட்டது. ஆனால் இந்த ஆண்டுக்கான 2

# அமெரிக்காவுடனான பேச்சில் சாதகங்கள்

## ஜனாதிபதி நேற்று தெரிவிப்பு

அமெரிக்கா விதித்த வரிகளிலிருந்து நிவாரணம்பெறுவதற்காக அமெரிக்காவிற்குச் சென்ற இலங்கை தூதுக்குழு, அங்கு நடத்திய பேச்சுக்கள் சாதகமாக அமைந்துள்ளன என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

இரத்தினபுரியில் நேற்று நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

# மக்களைக் கொன்ற கருணா, பிள்ளையானுக்கு அரசியல் உயர் பதவிகள் கொடுத்தது தவறு

## மைத்திரிக்குத் திடீர் ஞானோதயம்

மக்களைக் கொன்று குற்றமிழைத்த கருணா, பிள்ளையான் போன்றோருக்கு அரசியலில்பெரும்பதவிகள்வழங்கப்படடமை தவறு என்று தெரிவித்திருக்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் பிள்ளையானைத் தொடர்புபடுத்துவதற்கு முற்படுகின்றனர் என வெளியாகும் தகவல் தொடர்பில் நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

அது பற்றி என்னால் எதுவும் 2

# தேசபந்துவை பதவி விலக்கும் விசாரணைக்கு குழு நியமனம்

## நீதியரசர் சூரசேன தலைமையில் மூவர்

சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உயர்நீதிமன்ற நீதியரசர் சூரசேன தலைமையில் மூவரடங்கிய சிறப்பு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிறப்புக் குழுவின் இணை உறுப்பினர்களாகநீதியரசர்(ஓய்வுநிலை) இத்தவெல மற்றும் தேசிய பொலிஸ் சேவைகள் ஆணைக்குழுவின் 2

# டிக்கோயா மக்கள் ஆர்ப்பாட்டம்

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா போடைஸ் தோட்டப் பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 74 வயது மூதாட்டியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கிய போதைப்பொருள் அடிமையான இளைஞரைக் கைது செய்து தீவிர நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'குற்றவாளிகளைகைதுசெய்து சட்டத்தை நிலைநாட்டு', 'கைது செய் போதை குற்றவாளியை கைதுசெய்', 'போதைப்பொருளை ஒழிப்போம்' போன்றபதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குரல் எழுப்பினர்.

அதனைத் தொடர்ந்து, ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்குச் சென்ற ஹட்டன் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்து, நிலைமைதொடர்பாக ஆராய்ந்து, குற்றவாளியை உடனடியாகக் கைது செய்து நீதியின் முன் நிறுத்துவர்கள்என்றுஉறுதியளித்த பின்னர் மக்கள் கலைந்து சென்றனர். 2

## இனி இது .....

வீடாக மாலையில் அல்லது இரவில் சென்று துண்டறிக்கைகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். சில தமிழ்க் கட்சிகள் நேற்றுத்தான் விழித்துக்கொண்டு தமது சின்னம் இதுதான் என்று ஞாபகப்படுத்த சுவரொட்டிகளை ஒட்டி வைத்திருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தியினர் அதைக்கூடச் செய்தார்கள் என்று சொல்லமுடியாது. பெரும்பாலும் அரச அலுவலர்கள் எல்லோரும் தமக்குத்தான் வாக்களிப்பார்கள் என்ற திமிரிலா அல்லது அதீத நம்பிக்கையிலா என்று தெரியவில்லை. அவர்கள் வாக்குக் கேட்டு இரவு நேரங்களில்கூட வீட்டுக் கதவுகளைத் தட்டவில்லை. தேர்தலில் வாக்குக் கேட்டு கும்பிடு போட்டுக்கொண்டு வீடுகளுக்கு வரும் அரசியல்வாதிகளையே தேர்தல் முடிந்த பின்னர் மக்களால் பிடிக்க முடிவதில்லை. இந்த நிலையில் வீட்டில் இருந்தபடியே வென்றுவிடுவோம் என்ற மமதையில் இருக்கக்கூடிய ஆளும்தரப்பு வேட்பாளர்கள் தேர்தலின் பின்னர் என்ன செய்வார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

அரச அலுவலகங்களைப் பொறுத்தவரையில் தபால் மூல வாக்களிப்பில் நாடாளுமன்றத் தேர்தல் நிலைப்பாட்டில் பெரிய மாறுதல்கள் ஏற்படும் போன்று தெரியவில்லை. அப்படி மாறுதல் ஏற்படுவதற்கான அரசியல் பணிகளை தமிழ் அரசியல் கட்சிகள் செய்ததாகவும் தெரியவில்லை. கடந்த 70 ஆண்டுகளையும், உரிமைகளுக்காக தமது வாழ்க்கையே பணயம் வைத்த இரண்டு தலைமுறைகளையும் பற்றிச் சிந்திக்க முடிந்த, உணர்வுள்ள அரச அலுலர்களைத் தவிர மற்றவர்கள் ஒருதடவை அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுத்துத்தான் பார்ப்போமே என்கிற விட்டேத்தி நிலையில்தான் இருக்கிறார்கள். அதன் விளைவுகளை அவர்கள் அல்லர் அவர்களது பிள்ளைகளும் சந்ததியினருமே அனுபவிக்கப்போகிறார்கள் என்பது பாவம் அவர்களுக்குத் தெரியவில்லை. அதை அவர்களுக்கு தமிழ் கட்சிகளும் அரசியலாளர்களும் சொல்லிக்கொடுக்கவும் இல்லை. நேற்றிரவுதான் தமிழ் அரசியலாளர்களுக்கு தபால் மூல வாக்களிப்பு ஞாபகத்திற்கு வந்தமாதிரி, அப்பாவித்தனமான பணப் பற்றாக்குறை உள்ள எம்மவர்கள் இனியாவது விழித்துக்கொண்டு மே 9 வாக்களிப்புக்கு முன்னராவது ஏதாவது செய்கிறார்களா என்று பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பொய்யான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திசைகாட்டி இன்று பொய் சொல்வதன் மூலம் உலக சாதனைகளைப் படைத்துள்ளது. பொது ஊழியர்களின் சம்பளத்தை ரூ. 20,000 அதிகரித்து, ஒவ்வொரு 6 மாதங்களுக்கும் சம்பளத்தை அதிகரித்தபோதிலும், ஆளும்தரப்பு இந்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றத் தவறிவிட்டது.

திசைகாட்டி அதிகாரம் இல்லாத உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பணம் கொடுக்க மாட்டேன் என்று ஜனாதிபதி அறிக்கைகளை வெளியிடுகிறார். உள்ளூராட்சி நிறுவனங்கள் சட்டத்தைக்கூட அறியாமல் ஜனாதிபதி இந்த அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.

அதிகாரம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஆளும்தரப்பு பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி நாட்டிற்குச் சேவையைச் செய்யும், எனவே, எமக்கு அச்சமின்றி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார்.

## தேசபந்துவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் லலித் ஏக்கநாயக்க ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தனது பதவிக்கான அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களை பாரதூரமான வகையில் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பில் விசாரணை செய்து அதன் வெளிப்படுத்தல்களை அறிக்கையிடுவதற்காக சபாநாயகரால் இந்த சிறப்பு குழு நேற்று நியமிக்கப்பட்டது. இந்த குழு நேற்றைய தினம் முதல் தடவையாக கூடிக் கலந்துரையாடியுள்ளது. நாளை வெள்ளிக்கிழமை மீண்டும் கூடவுள்ளது.

2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அலுவலர்களை அகற்றுதல் (நடவடிக்கை முறை) சட்டத்தின் 5ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 3(ஈ) மற்றும் 3(உ) பிரிவுகளுக்கு அமைய துர்நடத்தை மற்றும் பதவியின் அதிகாரம் மற்றும் தத்துவங்களை பாரதூரமான முறையில் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்குவது குறித்து ஆராய்வதற்கான சிறப்பு குழுவை அமைக்கும் யோசனை ஏப்ரல் 8 நாடாளுமன்றத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்களும் இந்த யோசனைக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர்.

## மக்களைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறமுடியாது. விசாரணைகளை முன்னெடுக்கும் சி.ஐ.டியினர் மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கே அது பற்றி தெரிந்திருக்கக்கூடும். பிள்ளையான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர். அவ்வமைப்பில் இருந்து அவர் வெளியேறி அரசு பக்கம் இணைந்தபோது அவருக்கு நான் அமைச்சுப் பதவி வழங்கவில்லை.

அப்படிபட்ட ஒருவருக்கு எப்படி பதவி வழங்கப்பட்டது என வழங்கியவரிடம் கேளுங்கள். அவ்வாறு பதவி வழங்கப்பட்டமை தவறாகும். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறி கருணாவும், பிள்ளையானும் இராணுவத்துடன் இணைந்தனர். போரை முடிப்பதற்கு இது உதவியாக அமைந்திருக்கக்கூடும்.

ஆனால், அம்பாறையில் பிக்குகளைக் கொலை செய்தது யார்? இது அனைவருக்கும் தெரியும். எனவே, நபர்கள் யார் என்ற தகவலை எனது வாயில் இருந்து எடுக்க முற்படவேண்டும். விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தபோது கருணாவும் பிள்ளையானும் மக்களைக் கொன்று குற்றம் இழைத்தவர்கள் - - என்றார்.

## டிக்கோயா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகநபரைக் கைது செய்த பொலிஸார் ஹட்டன் நீதிவான் மன்றில் நிறுத்தியபோது அவரை மே 4 வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏப்ரல் 20 தோட்டப் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் ஐஸ் போதைப்பொருள் உட்கொண்டுவிட்டு, தனிமையில் இருந்த மூதாட்டி வீட்டின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து உள்ளே நுழைந்து அவர் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 74 வயது மூதாட்டி டிக்கோயா கிழங்கன் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

## இந்தியாவுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு செலவுத் திட்டத்தில் அந்த வாக்குறுதிகள் குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் மேடைகளில் குறிப்பிட்ட வாக்குறுதிகள்கூட வரவு செலவுத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அனைத்து விடயங்களிலும் பொய் மாத்திரமே மிகுதியாகியுள்ளது.தேர்தல் வெற்றிக்காக நாங்கள் மக்களுக்கு பொய்யுரைக்கவில்லை. முடிந்ததை மாத்திரம் குறிப்பிட்டோம்.

அரச நிர்வாகத்தில் நாட்டு மக்கள் மத்தியில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவதாக ஆளும்தரப்பு குறிப்பிட்டது. ஆனால் இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை ஆளும்தரப்பு இன்றுவரையில் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவில்லை.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை ஆளும்தரப்பு நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும். ஒப்பந்தங்களின் உள்ள விடயங்களை அறிந்துக்கொள்ளும் உரிமை நாட்டுமக்களுக்கு உண்டு. நாட்டின் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்களை மூடிமறைப்பதற்கு இடமளிக்க போவதில்லை என்றார்.

## ஒரு கோடிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள எண்ணை (TIN) பெற்றுள்ளனர், மேலும் சுமார் 7 மில்லியன் பேர் டின் (TIN) பெற உள்ளனர் என்று உள்நாட்டு வருவாய்த் துறையின் துணை ஆணையர் ஜெனரல் சாந்தா கூறினார்.

இலங்கையில் 18 வயதுக்கு மேற்பட்ட சுமார் 17 முதல் 18 மில்லியன் இலங்கையர்கள் இருக்கின்றனர் என்று உள்நாட்டு வருவாய்த் துறை மதிப்பிட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

புதிய வரி திருத்தங்களின் கீழ் வட்டி மீதான பிடித்தம் செய்யும் வரி 5 முதல் 10 சதவீதமாக அதிகரித்ததன் மூலம், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தற்போது உள்நாட்டு வருவாய்த் துறையின் தலைமையகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு டின் (வீணுாஹி) ஐப் பெற வருகிறார்கள் என்றும் அவர் கூறினார்.

18 லட்சத்திற்கும் குறைவான ஆண்டு வருமானம் உள்ள நபர்கள் தங்கள் கணக்குகளில் இருந்து வட்டி மீதான பிடித்தம் செய்யும் வரியை வசூலிப்பதைத் தடுக்க, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழங்கப்படவேண்டிய சுய அறிவிப்புக்கு டின் எண் தேவை என்பதே இதற்குக் காரணம் என்று துணை ஆணையர் ஜெனரல் கூறினார்.

இருப்பினும், வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய சுய அறிவிப்பு, வட்டிக்கு வரி வசூலிக்க வேண்டாம் என்று தெரிவிக்கும், டின் (TIN) எண் இல்லாவிட்டாலும் வழங்கப்படலாம், மேலும் இது நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு வருவாய்த் துறையின் துணை ஆணையர் ஜெனரல் பி.கே.எஸ். சாந்தா கூறினார்.

டின் எண்கள் இல்லாமல் சமர்ப்பிக்கப்பட்ட சுய அறிவிப்புகளை வரும் மாதத்தின் முதல் வாரத்திற்குள் பெற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றைப் பெற்ற பிறகு, விண்ணப்பப் படிவத்தில் உள்ள தகவல்களைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு ஒரு டின் எண் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

வரி செலுத்தவேண்டிய கிட்டத்தட்ட 9 மில்லியன் மக்களுக்குத் தெரிவிக்காமல் உள்நாட்டு வருவாய்த் துறை ஏற்கனவே டின் எண்களை தீர்ந்துவிட்டதாகவும், அவர்களிடம் எண் உள்ளதா இல்லையா என்பதை உள்நாட்டு வருவாய்த் துறை வலைத்தளத்திலிருந்து கண்டுபிடிக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

## பெரமுனவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ளன. இவை நாட்டு மக்கள் சுதந்திரமாக உயிர்வாழ்வதற்கான உரிமையை கேள்விக்குள்ளாக்கியுள்ளன. எனவே மக்களின் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆளும்தரப்பு சரிவர நிறைவேற்றவேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடையாளம் தெரியாதவர்களால் துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவது அதிகரித்துச் செல்கின்றது. தற்போது அரசியல் செயற்பாட்டாளரான டான் பிரியசாத் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். ஒவ்வொரு நபர்களுக்கும் அரசியல் நிலைப்பாடுகள் உள்ளன. அவற்றோடு மற்றவர்கள் இணங்குவதில்லை. அந்த வகையில் டான் பிரயசாத்தின் அரசியல் நிலைப்பாட்டுடன் எமக்கு உடன்பாடு இல்லை. ஆனால், இலங்கை மக்கள் ஒவ்வொருவருக்கும் உயிர்வாழ இருக்கும் உரிமையை மதிக்கிறோம்.

எந்தவொரு அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தாலும் அவருக்கு உயிர் வாழ்வதற்கான உரிமை இருக்கிறது. அவர்களின் அந்த உரிமையைப் பாதுகாப்பது ஆளும்தரப்பின் அடிப்படை பொறுப்பாகும். தம்மை தெரிவு செய்த குழுக்களை மாத்திரமே நாம் பாதுகாப்போம் என்ற நிலைப்பாட்டை ஆளும்தரப்புக் கொண்டிருக்குமாயின் அது தவறாகும்.

ஆயுதபலம் நாட்டின் பாதுகாப்பு படைகளுக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் பாதுகாப்பு படைகளின் ஊடாக மக்களின் உயிரைப் பாதுகாக்கும் பொறுப்பை ஆளும்தரப்பு சரிவர நிறைவேற்றவேண்டும். அதனை விடுத்து மக்கள் வீதியில் செல்வதற்குக்கூட அச்சப்படும் சூழல் உருவாகுவதற்கு இடமளிக்கப்படக்கூடாது. எமது நாடு இதற்கு முன்னர் இவ்வாறான பல்வேறு சூழ்நிலைகளை எதிர்கொண்டிருக்கிறது.

நாட்டில் தொடர்ச்சியாக பதிவாகிக் கொண்டிருக்கும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தொடர்பில் பரந்தளவில் விசாரணைகளை முன்னெடுத்து உண்மைகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் என்றார்.

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்ட பேச்சுக்களின் பெறுபேறுகள் தொடர்பாக இலங்கை மற்றும் அமெரிக்காவால் கூட்டு அறிக்கை வெளியிடப்படவுள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிதி துணை அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட தூதுக்குழு தற்போது தொடர்புடைய வரிகள் குறித்து விவாதிக்க அமெரிக்கா சென்றுள்ளது. இலங்கையிலிருந்து அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களிற்கு 44 சதவீத வரியை அமெரிக்கா அறிவித்தது. பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவதை 90 நாட்களுக்கு ஒத்தி வைத்தது.

அமெரிக்காவின் வரியால் பொருளாதாரச் சுனாமியை எதிர்கொள்ளும் அபாயத்தில் உள்ள இலங்கை அது தொடர்பில் பேச்சு நடத்தத் தனது தூதுக்குழுவை அமெரிக்காவிற்கு அனுப்பு வைத்தது

## 17 மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். இதற்காக கண்ணீர் புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 'மிதிகம பாலா மாமா' உட்பட மூன்று கைதிகளை மாத்தறை சிறைச்சாலையிலிருந்து வேறு மூன்று சிறைச்சாலைகளுக்கு மாற்ற நேற்று இரவு முயற்சி நடந்ததால் பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டது. மிதிகம சூட்டி என்ற பாதாள உலகக் கும்பல் உறுப்பினரின் நெருங்கிய கூட்டாளியான 'மிதிகம பாலா மாமா' சிறைச்சாலையிலிருந்து போதைப்பொருள் கடத்தலை நடத்தி வருவதாக சிறைச்சாலை புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்த இடமாற்றம் திட்டமிடப்பட்டது.

மேலும், மாற்றப்பட திட்டமிடப்பட்ட இரண்டு கைதிகளில் தெவிநுவர தேவலாயத்திற்கு முன்னால் நடந்த இரட்டைக் கொலையில் தொடர்புடைய சந்தேக நபரும் இருந்ததாக அறியப்படுகிறது. அதன்படி, அவர் அழைத்துச் செல்லப்படவிருந்தபோது, ஏராளமானோர் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பகுதியில் கைதிகள் பூட்டுகளை உடைத்து வெளியே வந்து வன்முறையில் ஈடுபட்டனர்.

அதன் பிறகு, அவர்கள் மற்ற அறைகளில் உள்ள பூட்டுகளை உடைத்து, அங்கு அடைக்கப்பட்டிருந்த கைதிகளை வெளியே அழைத்து

காலைக்கதிர் ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# இறக்காமம் அரபா நகர் மக்களுக்கு கற்களாலான வீடமைக்க அடிக்கல்

(நூருல் ஹுதா உமர்)

தேசியரீதியாகபல்வேறுசமூகப்பணிகளைசெய்து வரும் சதகா புல்லட்டின் நலன்புரி அறக்கட்டளை நிறுவனத்தால் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இறக்காமம் அரபா நகர், கொக்குலான் கல் மக்களுக்கு கற்களால் ஆன வீடுகள் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் பிரதிநிதியும் பொறியியலாளருமான எம்.சி.கமால்நிஷாத் அவர்களின் நெறிப்படுத்தலிலும், தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் தகரக் கொட்டில்களில் உள்ள மக்களின் கஷ்டங்களை போக்கும் நோக்கில் மூன்று வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கல்முனை அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நசார், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, ஆசிரியர் சிப்லி சம்சுதீன், பள்ளிவாசல் தலைவர், ஊர் மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீப் நிறுவனங்களின் உதவியுடன் தொடர்ந்தும் இந்த பிரதேச மக்களுக்கு பொறியியலாளர் எம்.சி.கமால் நிஷாத் அவர்களால் பல்வேறு சமூக பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டம் இறக்காமம் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்த அரபா நகர் இகொக்குலான் கல் மக்கள் எதிர்நோக்கின்ற பிரச்சினைகள் சொல்லிலடங்காதவை.

இப்பகுதி மக்களுக்கு மலசல கூட வசதி, மின்சார வசதி, வீதி அபிவிருத்தி, தெருவிளக்கு, மாலை வேளைகளில் உள்ள பாம்பு தொல்லை, யானைகளின் அட்டகாசம் என பல்வேறு வகையான பிரச்சினைகளை தீர்க்க வேண்டிய அவசியம் உள்ளதை காண முடிகிறது.

எனவே பொறுப்பு வாய்ந்தவர்கள் அனைவரும் இது தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## பொலிஸார் மீது பிழைகள் இருப்பின் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

### என்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி.



பொதுமக்களின் பாதுகாப்பிற்கே பொலிஸார் உள்ளனர். அவர்கள் மீது பிழை இருப்பின் உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து

கருத்து தெரிவித்த அவர் -

ஊழல் மோசடியற்ற உள்ளூராட்சி மன்றங்களை அமைப்பதற்கு அரச ஊழியர்கள் தமது ஆதரவை திசைகாட்டி சின்னத்திற்கு வழங்கவேண்டும். வடக்கில் பொலிஸாருக்கும், பொதுமக்களுக்கும் இடையில் இடம்பெறும் பல்வேறு சம்பவங்கள் தொடர்பாக ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

அந்தவகையில் கடந்த காலங்களில் பொலிஸாரால் பல்வேறு முறைகேடுகள், துஸ்பிரயோகங்கள் இடம்பெற்றன. எமது அரசாங்கம் வந்ததன் பின்னர் கணிசமான அளவு அவற்றைக் குறைத்திருக்கின்றோம். எதிர்காலத்தில் முழுமையாக அதனை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து பொலிஸார் மீது பிழை இருப்பின் சரியான விசாரணையை நடத்தி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள்மீது பொலிஸார்வன்முறையைபிரயோகிக்கின்றனர் என அறியக்கூடிய விடயங்களை அந்தந்த பிரதேசங்களை சேர்ந்த பொலிஸ் உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கைகளை எடுக்குமாறும் பணிப்புரைகளை விடுத்துள்ளோம்.

எதிர்காலத்தில் இவ்வகையான செயற்பாடுகளை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும். பொதுமக்களின் பாதுகாப்பிற்கே பொலிஸார் உள்ளனர். அதனை பயன்படுத்தி அட்டூழியங்கள் செய்வதற்கு எந்தவித சமரசமும் கிடையாது. எனவே பொதுமக்கள்மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டால் ஆளும் கட்சி என்ற வகையில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயங்கப் போவதில்லை.

கடந்த காலங்களில் இந்த உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள்மீது வரியையும் வாடகையும் விதித்து அறவிடும் பணியை மாத்திரமே செய்தது. ஆனால் அறவிடப்பட்ட அந்த நிதியை உட்கட்டுமான அபிவிருத்திக்காக செலவழிக்காமல் நிலையான வைப்பில் மாத்திரமே வைக்கப்பட்டது. ஆனால் நாம் ஆட்சியமைக்கும் சபைகளில் மக்களின் பணத்தை மக்களின் தேவைகளுக்கும் அபிவிருத்திக்கும் வழங்குவோம்.

எனவே எதிர்வரும் தினங்களில் தபால் மூலமான வாக்குகளை அளிக்கவுள்ள அரச ஊழியர்கள் நன்கு சிந்தித்து உங்கள் வாக்கை திசைகாட்டி சின்னத்திற்கு வழங்க வேண்டும். - என்றார். 100

## உள்ளூராட்சி தபால் வாக்களிப்புக்கான சகல பணிகளும் மட்டக்களப்பில் நிறைவு

(சக்திவேல்)

உள்ளூராட்சி தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான சகல பணிகளும் நிறைவடைந்துள்ளன மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்புக்காக 11554 பேர் தகுதி பெற்றுள்ளனர் இதுவரை 134 தேர்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் தெரிவித்துள்ளார். புதன்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 12 உள்ளூராட்சி சபைகளில் இருந்து பட்டியல் வேட்பாளர்களுடன் சேர்த்து 274 பேர் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

வியாழக்கிழமை தொடக்கம் அனைத்து அரசு அலுவலகங்கள் பொலிஸ் நிலையங்கள் தபால்மூல வாக்களிப்பு இடம்பெற உள்ளத்துடன் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளுக்காக அமர்த்தப்பட உள்ளனர்.

மாவட்டத்தில் 447 வாக்களிப்பு நிலையங்களில் கிடைக்கப் பெறுகின்ற வாக்குகள் 144 வட்டார தேர்தல் வாக்கு எண்ணும்நிலையங்களுக்குகொண்டுவரப்பட்டு என்னும் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

தபால்மூலவாக்கு எண்ணும்பணிகளுடன் இணைந்ததாக இறுதி தேர்தல் முடிவு வட்டார தேர்தல் எண்ணும் நிலையத்தில் இருந்து வெளியிடப்படும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

## பேண்தகு அபிவிருத்தி குறித்த கலந்தாய்வு

வடமாகாண பேண்தகு அபிவிருத்திக்கான கொள்கைஒத்திசைவைமேம்படுத்துவதற்கான துறைசார்சார்ந்தவர்களின் கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடல் சுற்றாடல் மற்றும் அபிவிருத்திக்கான நிலையம், யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பல்கலைக்கழகங்களுடன் இணைந்து குறித்த கொள்கை திட்டத்தை தயாரிக்கவுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி ரெ.சுவந்தினி ,பேராசிரியர் க.கஜபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். 113







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்?

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில், தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது ஒரு முக்கியமான கேள்வி. பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில், தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தும், அவர்களின் உரிமைகளை பாதுகாக்கும், மற்றும் சமூக முன்னேற்றத்தை உறுதி செய்யும் நபர்களைத் தேர்வு செய்வது அவசியமாகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த 70 வருடகால உரிமைப் போராட்டத்தின் அடைவுகளைப் பெறும் தருணம் வருகையில் கொழும்பு ஆளும்தரப்புக்களை ஆதரித்து, வெண்ணை திரண்டு வரும் போது தாழியை உடைத்துவிடக்கூடாது.

**1. தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் நலன்கள்:**

தமிழ் மக்கள், கடந்த காலங்களில் பல்வேறு சவால்களை எதிர்கொண்டுள்ளனர். அவர்களின் நில உரிமைகள், மொழி உரிமைகள், மற்றும் பண்பாட்டு அடையாளங்கள், மத வழிபாட்டு சுதந்திரம் என்பன ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளன. இந்த உரிமைகளைக் கேட்டதற்காக, எங்களை நாங்களே ஆளும் உரிமை இறைமையைக் கேட்டதற்காக எம் மீது 30 வருட காலப் போர் திணிக்கப்பட்டது. உயிர்களும் சொத்துக்களும் அழிக்கப்பட்டன. இவற்றுக்கான எந்தவொரு தீர்வும் காணப்படாத நிலையில், பொருளாதாரப் பிரச்சினை மட்டுமே இலங்கையில் இருக்கிறது என்ற வகையில் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நினைக்கும் தெற்குக் கட்சிகள் தமிழர் பகுதிகளில் ஆதிக்கம் பெறுவது இத்தனை காலம் நடத்திய போராட்டத்தையும் இழப்புக்களையும் அர்த்தமில்லாமல் செய்துவிடும். எனவே தமிழர் உரிமைகளை இவற்றை உறுதி செய்யும் வகையில், தமிழ் மக்களின் உரிமைகளை தேவைகளை முன்னிறுத்தும் வேட்பாளர்களைத் தேர்வு செய்வது முக்கியம்.

**2. சமூக முன்னேற்றம் மற்றும் அபிவிருத்தி:**

தமிழ் பகுதிகளில் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, மற்றும் அடிப்படை வசதிகள் போன்ற துறைகளில் முன்னேற்றம் தேவைப்படுகிறது. இவற்றை மேம்படுத்தும் திட்டங்களை முன்வைக்கும் மற்றும் செயல்படுத்தும் திறன் கொண்ட வேட்பாளர்களைத் தேர்வு செய்வது அவசியம். அதற்கு இந்தப் பகுதியிலிருந்து இந்த மக்களின் சிந்தனைகளையும் பண்பாட்டையும் புரிந்துகொண்ட தலைவர்கள் இருப்பது அவசியம். எமது இன, மத, மொழி புரியாத தலைவர்களின் கீழ் இயங்குபவர்களால் இந்தப் பகுதியின் அபிவிருத்தியை மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு ஏற்ப செய்ய முடியாது.

**3. அரசியல் சீர்திருத்தம் மற்றும் நல்லாட்சி:**

அரசியல் சீர்திருத்தம், ஊழலற்ற நிர்வாகம், மற்றும் மக்கள் பங்களிப்பை ஊக்குவிக்கும் நல்லாட்சியை நிறுவும் நோக்குடன் செயல்படும் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதென்பது தமிழர்களின் உரிமைகளையும்அவர்கள்வென்றுதரக்கூடியவர்களாகஇருக்கவேண்டும் என்பதோடு இணைந்ததாக இருக்கவேண்டும். .

**4. இன நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமை:**

இலங்கையின் பல இன, மத, மொழி சமூகங்களில் நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை வளர்க்கும் நோக்குடன் செயல்படுவது என்பது தேர்தலில் தமிழர்களின் உரிமைகளோடு சேர்ந்தது. இலங்கையில் தமிழர்கள் சக மனிதர்களாகவும் முதல்தர குடிமக்களாகவும் நடத்தப்படுவதையும் உள்ளடக்கியது. அதற்குரிய வேட்பாளர்களைத் தேர்வு செய்வது, தமிழ் மக்களின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு உதவும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில், தமிழ் மக்கள் அவர்களின் உரிமைகள், நலன்கள், மற்றும் சமூக முன்னேற்றத்தை உறுதி செய்யும், நல்லாட்சியை நிறுவும், மற்றும் இன நல்லிணக்கத்தை வளர்க்கும் வேட்பாளர்களைத் தேர்வு செய்ய வேண்டும். இது, தமிழ் மக்களின் எதிர்கால நலன்களுக்கு வழிகாட்டியாக இருக்கும்.

சம்பள அதிகரிப்பு, அபிவிருத்திக்கான நிதி போன்ற சலுகைகளுக்காகவும் கொழும்பிலுள்ள ஆளும் தரப்பிடமிருந்து சலுகைகளைப்பெறுவதற்காகவும்வாக்களிப்பதுஎன்பதுஎதிர்க்காலத் தமிழ்ச் சந்ததியை அழிப்பதற்கு அடிக்கல் இடும் நிகழ்வாக அமையும். உங்கள் பிள்ளைகளின் இளையவர்களின் எதிர்காலம் உரிமை மற்றும் அதிகாரத்தோடு கூடிய சுபீட்சத்தோடு இருக்கவேண்டுமா அல்லது இனத்துவ அடையாளங்கள் சிதைக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட சமூகமாகத்தொடரவேண்டுமாஎன்பதையேதபால்மூலவாக்களிப்புக்கு முன்பாகவும் வைகாசி 6 தேர்தல் வாக்களிப்புக்கு முன்பாகவும் தமிழர்கள் சிந்திக்கவேண்டும்.

# அறக்கொட்டியான் புழுவின் தாக்கம் கிளிநொச்சி சிறுபோகத்தில் தீவிரம்

## விவசாயிகள் பாதிப்பு





கிளிநொச்சி மாவட்டத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான சிறுபோக நெற்செய்கை மாவட்டத்தின் மிகப்பெரிய குளம் இரணைமடுக்குளம் உள்ளிட்ட அனைத்து குளங்களின் கீழ் சிறுபோக செய்கை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் தற்போது பயிர்கள் 15-25 நாள்கள் பயிர்களாக உள்ள நிலையில் அறக்கொட்டியான் புழுத்தாக்கம் பயிர்களை முற்றாக அழிப்பதாக விவசாயிகள் கிளிநொச்சி மாவட்டத்தின் முரசுமோட்டை, ஊரியான், பன்னங்கண்டி பகுதிகளில் குறித்த புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலபோக நெற்செய்கையிலும் நோய்த்தாக்கம் காரணமாக தாம் பெரும் நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் தெரிவித்தனர். 316

# சுற்றுச்சூழல் சுகாதாரம் குறித்து மாளிகைக்காட்டில் கள ஆய்வு

(பாறுக் ஷிஹான்)







அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடுகிழக்குகடற்கரை பகுதி சுற்றுசூழல் சுகாதாரம் தொடர்பானகளஆய்வுமற்றும் கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான பரிசோதனை செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதன் போது காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன் ,காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லீமா வசீர், பொது சுகாதார பரிசோதகர் உத்தியோகாதர்கள், பகுதி கிராம சேவகர், காரைதீவு பிரதேசசபை செயலாளர், கடற்சூழல் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகாதர்கள், மீன்வாடி சங்க உறுப்பினர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய திணைகள உத்தியோகதர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது இப்பகுதி வியாபார நிலையங்களின் திண்ம, திரவ கழிவகற்றல் முகாமைத்துவம் தொடர்பான தொழிநுட்ப திட்ட ஆலோசனை சுகாதார வைத்திய அதிகாரி அவர்களால் முன் மொழியப்பட்டது. மேலும் இப்பகுதியில் அனைத்து அரசநிறுவங்களின் பங்களிப்போடும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்வது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

# வவுனியாவில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவர் கைது

வவுனியா, வாரிக்குட்டியூர் பகுதியில் 30 போத்தல் கசிப்புடன் ஒருவரை கைது செய்துள்ளதாக பூவரசங்குளம் பொலிஸார் நேற்று(புதன்கிழமை) தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் சட்டவிரோத சாராயம் விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய செவ்வாய்க்கிழீழமை இரவு வீடொன்றை சோதனை செய்த பொலிஸார் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த 30 போத்தல் சட்டவிரோத சாராயத்தைக் கைப்பற்றினர்.

அதனை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் 48 வயதுடைய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். 100

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக ஏழாவது ஆண்டு சீருடை அறிமுகப் போட்டி

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு இடையிலான சீருடை அறிமுக சிநேகபூர்வ கடின பந்து கிரிக்கெட் போட்டி ஒன்று கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் நான்கு விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. பிளாஸ்டர் விளையாட்டுக்கழக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.எம். அசாருதீன் 30 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களை கூடிய ஓட்டமாக பெற்றுக்கொடுத்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 15 ஓவர்கள் எதிர்கொண்டு 07 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர்.

போட்டியின் ஆட்ட நாயகனாகவும், சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் 30 பந்துகளை எதிர்கொண்டு 55 ஓட்டங்களை பெற்ற பிளாஸ்டர் விளையாட்டுக்கழக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.எம். அசாருதீன் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் சஜான் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிக்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் யூ.எல்.சப்ரின் கலந்து கொண்டார்.












காலைக்கதிர் Kalaikkathir

# இலஞ்சம்பெற்ற குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான், தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவரிடம் இருந்து இலஞ்சம் பெற முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் கைதான கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் ஒருவரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனையில் அமைந்துள்ள பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றிவரும் கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் தன்னிடம் 01 லட்சம் ரூபா லஞ்சம் கோருவதாக பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநர் ஒருவர் கொழும்பிலுள்ள லஞ்சஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான செவ்வாய்க்கிழமை கல்முனையில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிராந்திய காரியாலயத்தில் வைத்து கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் கூறியமைக்கு அமைவாக அவரின் காரியாலய பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் இலஞ்சப் பணத்தில் ஒரு பகுதியை பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ. நடத்துநர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த இலஞ்சஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகரையும் அங்கு கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தரையும் கைது செய்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர்(வயது-53) மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் (வயது-47) இருவரையும் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை முன்னிலைப்படுத்திய போது 14 நாள்கள் சந்தேக நபர்களை விளக்கமறியவில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும் கடந்த காலத்தில் திருகோணமலை இலங்கை போக்குவரத்து சபையில் கடமையாற்றும் பஸ் நடத்துநர் ஒருவர் மேற்கொண்ட நிதி மோசடி காரணமாக பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட நிலையில் அதற்கு எதிராக விசாரணையின் போது சட்ட நடவடிக்கை எடுக்காமலிருக்கும் பொருட்டும் மீண்டும் பணியில் குறித்த பஸ் நடத்துநரை இணைத்து கொள்வதற்காகவும் குறித்த பணிநீக்கம் செய்யப்பட்ட பஸ் நடத்துநரிடம் இருந்து மேற்படி கிழக்கு மாகாண ஒழுக்காற்று குழு பரிசோதகர் இலஞ்சம் கோரியதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்சஊழல் ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# போதை மாத்திரைகளை இளைஞர்களுக்கு விநியோகித்தவர் அம்பாறையில் கைது

(பாறுக் ஷிஹான்)

போதை மாத்திரைகளை நீண்ட காலமாக இளைஞர்களுக்கு விநியோகம் செய்த சந்தேகத்தின் அடிப்படையில் 29 வயது சந்தேக நபரை பெரியநீலாவணை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது செவ்வாய்க்கிழமை இரவு அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவில் உள்ள மருதமுனை புறநகர் பகுதியில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது சுமார் 700 இக்கும் அதிகமான போதை மாத்திரைகளை தன்வசம் வைத்திருந்த 29 வயது சந்தேக நபர் கைதானார்.

மேலும் சந்தேக நபர் உள்ளிட்ட சான்றுப் பொருள்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க வழிநடத்தலில் பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# மல்வத்தை பகுதியில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம்

(சாஜஹான் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மல்வத்தை-03 ஆம் வட்புரம் கிராமத்தில் இலவச ஆயுர்வேத வைத்திய முகாம் நேற்று (செவ்வாய்க்கிழமை) சம்மாந்துறை பிரதேச செயலக சுதேச வைத்திய சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் வை.எல்.எம் நளீம் தலைமையில் மஜீட்புரம் சனசமூக நிலையத்தில் நிலையத்தில் இடம்பெற்றது.

சுகாதார அமைச்சின் சுதேச வைத்திய பிரிவின் நிதி ஒதுக்கீடின் மூலம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து நடத்திய இந்த வைத்திய முகாமில் சம்மாந்துறை ஆயுர்வேத வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம் ரிப்கா, சமூக வைத்திய அதிகாரி டி.எல் றுமைஸா ஆகியோரால் இலவச வைத்திய சேவை முகாம் இடம்பெற்றது.

இந்த இலவச வைத்திய முகாமுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் இந் நிகழ்வுக்கு மஜீட்புரம் நூலக பொறுப்பாளர் எம்.தௌபீக், மல்வத்தை-03 கிராம சேவகர் எம்.ஐ.எம் சப்றாஸ், மல்வத்தை-04 கிராம சேவகர் ஐ.செல்வராஜா ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# வாக்கெண்ணும் அலுவலர்களுக்கு செயலமர்வு

(சக்திவேல்)

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் வாக்கெண்ணுதல் கடமைக்காக நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கான வாக்கெண்ணுல் தொடர்பான பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சட்டத்தரணி எம்.பி.எம்.சுபியான் தலைமையில் வாக்கெண்ணுதல் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி செயலமர்வு மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் போது மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த விடயங்கள் தொடர்பாகவும், தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது விரிவாக தெளிவூட்டப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கடமைக்காக இம்முறை 457 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிக்கப்படவுள்ளதுடன் 144 வாக்கெண்ணும் நிலையங்களாக செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வில் மாவட்ட புள்ளி விவரவியளாலர் ரீ.ஜெய்தனன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சித்திரை புத்தாண்டு பெருவிழா கிழக்கில்

(அபு அலா)

கிழக்கு மாகாண தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டு பெருவிழா செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்திற்கு முன்பாக உள்ள உவர்மலை சிறுவர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண அமைச்சுக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விளையாட்டு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இதில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் மற்றும் பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உதவிச் செயலாளர்கள், மாகாண திணைக்களப் பணிப்பாளர்கள் மற்றும் ஆணையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்த அதேவேளை அங்கு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கேற்றிருந்தனர்.

செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்த விளையாட்டு போட்டி நிகழ்வுகள் இரவு 10.30 மணிவரை இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.









உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025
கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு
• CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
• NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
• வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
• ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
• GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane, Jaffna.
தொடர்பு:070 7070 722

காலைக்கதிர் Kalaikkathir

# உள்ளாட்சி தேர்தல் 2025

# ஆட்சியமைக்கும் போது கஜேந்திரகுமாரோடு இணைந்து செயற்படக் கூடிய வல்லமையை உண்டு பண்ணுவோம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி பகிரங்கம்

ஆட்சி அமைக்கும் போது ஜேவிபி உடனோ அல்லது எந்தவொரு சிங்களக் கட்சியிடனோ எங்களது உறவு இருக்கமாட்டாது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு இணைந்து செயற்படக் கூடிய வல்லமையை நாங்கள் உண்டு பண்ணுவோம். ஏனென்றால் நாம் ஒற்றுமையை நேசிப்பவர்கள் என ஜனநாய தமிழ் தேசியக் கூட்டணியின் வன்ன மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜேவிபி இங்கு களமிறங்கியுள்ளது. அதன் வேட்பாளர்கள் தமிழர்களாகவுள்ளனர். அவர்களுடைய சிந்தனை என்னவென்றால் தாங்கள் சபைகளை கைப்பற்ற வேண்டும். வடக்கில் கூடுதலான ஆசனங்களைப் பெற வேண்டும் என்பது அவர்களது நோக்கம். பாராளுமன்ற தேர்தலில் வடக்கில் எவ்வாறு அதிக ஆசனங்களைப் பெற்றோமோ அதேபோல் சபைகளையும் கைப்பற்ற வேண்டும். அதன் மூலம் அடுத்து வரவிருக்கும் மாகாணசபை தேர்தலிலும் வெற்றி பெறலாம் என நினைக்கிறார்கள்.

வவுனியாவில் ஜேவிபி சார்பாக இரண்டு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். அதில் ஒருவர் வைத்தியர். மற்றவர் ஆசிரியர். ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழர்கள் இருக்கின்ற போது உபாலி என்பவரை தேசியப் பட்டியலில் நியமனம் செய்து பிரதி அமைச்சராக்கி அபிவிருத்திக் குழுவின் தலைவராக போட்டுள்ளார்கள். இந்த ஜேவிபியின் சிந்தனை எப்படி இருக்கின்றது என்று பாருங்கள். தமிழர்கள் படித்தவர்களாக வென்றுள்ளார்கள். வன்னி மண்ணிலே வெற்றி பெற்ற அந்த தமிழர்களுக்கு பதவிகள் வழங்காது ஒரு சிங்கள பெரும்பான்மை இனத்தை சேர்ந்த உபாலிக்கு கொடுத்திருக்கின்றது என்றால் இந்த அரசாங்கத்தின் சிந்தனையும் எப்படி இருக்கின்றது என்று பாருங்கள்.

பிரதேச சபை, மாநகர சபை என்பவற்றை பிடித்து அடுத்த மாகாண சபையை பிடிக்கும் நிலை வரும். பிமல் ரத்நாயக்கா அவர்கள் ஜனாதிபதியின் பேச்சை விமர்சிக்க தமிழ் அரசியல் தலைவர்களுக்கு அருகதை இல்லை எனக் கூறுகின்றார். ஆகவே, ஒட்டுமொத்தமாக எல்ல சபைகளையும் பிடித்து விட்டால் தமிழர்களுக்கு இந்த நாட்டிலே அருகதை இல்லை என சொல்லி விடுவார்கள். அதனை இப்பவே ஆரம்பித்து விட்டார்கள்.

தையிட்டி புத்தர் கோவில் பிரச்சனை தீர்கப்பட வேண்டும் எனில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாதாம். அதன் அர்த்தம் என்ன. வன்னி மண்ணில் விலை கொடுக்கப்பட்டுள்ளது. உயிர்கள் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. அந்த மண்ணில் இருக்கும் தமிழ் தலைவர்கள் ஜனாதிபதி உரையை விமர்சிக்கக் கூடது எனக் கூறுவதற்கு பிமல் ரத்நாயக்காவுக்கு என்ன யோகியதை இருக்கிறது.

வடக்கில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெற்று விட்டால் நீங்கள் எதுவும் பேச முடியுமா. ஜனாதிபதி தனது உரைகளில் சபைகளை கைப்பற்றக் கூடிய கதைகளை சொல்லுகின்ற போது அதை விமர்சிக்கின்ற தமிழ் தலைவர்களை வாய் மூட வேண்டும் என கூற உங்களுக்கு என்ன அருகதை இருக்கிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் அனைவரும் இலங்கையர் என்று சொன்னார்கள். அந்த சிந்தனை இப்போது எங்கே..? தமிழர்கள் எதற்கு போராடினார்கள். எங்களது உரிமை, மண், தேசம் பாதுக்கப்படும் எனப் போராடினார்கள். அப்படிப்பட்ட தமிழ் தரப்பை பார்த்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்.

எமது வன்னி பிரதேசம் எத்தனையோ சிங்கள ஆட்சியாளர்களை ஆட வைத்தது. மறந்து விட வேண்டாம். அந்த வழி வந்த தமிழர்கள் உங்களுக்கும் சவாலாக மாறுவார்கள். ஆகவே பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை என்பவற்றை நாம் கைப்பற்றி ஆக வேண்டும். எந்தக் கட்சியும் பெரும்பான்மையை பெற முடியாது. ஆனால் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி ஆட்சியை நிர்ணயிக்கும் சக்தியாக இருக்கும்.

ஆட்சி அமைக்கும் போது ஜேவிபி உடனோ அல்லது எந்தவொரு சிங்களக் கட்சியிடனோ எங்களது உறவு இருக்கமாட்டாது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தோடு இணைந்து செயற்படக் கூடிய வல்லமையை நாங்கள உண்டு பண்ணுவோம். ஏனென்றால் நாம் ஒற்றுமையை நேசிப்பவர்கள்.

சங்கு சின்னம் ஜனாதிபதி தேர்தலில் பொது சின்னமாக மாற்றம் பெறுகின்ற போது யாருமே சங்கு சின்னத் ஆதரிக்கவில்லை. இதில் இருக்கின்ற கட்சிகள் மட்டும் தான் அதனை ஆதரித்தன.

தமிழரசுக் கட்சி பெரும்பான்மை தலைவர்களை ஆதரித்தார்கள். மக்களை வாக்களிக்க வேண்டாம் அமைதி காணுங்கள என்றும் சொனனவர்கள் இருக்கிறார்கள். சங்கு சின்னத்தில் பொது வேட்பாளரை உருவாக்கி நாம் தான் செயற்பட்டோம் எனக் கூறுகின்றோம். ஆகவே ஒற்றுமையை கருதி எங்களுடைய ஆட்சி அமைக்கின்ற விதம் தமிழ் தரப்புடன் தான் இருக்கும். அற்ப சொற்றபத்திற்காக கண்டவர்களின் காலில் விழும் நிலை இல்லை என்பதை கூறுகின்றேன்.

அடுத்த மாகாண சபை தேர்தலில் அனைத்து தமிழ் கட்சிகளும் சேர்ந்து போட்டியிடும். அதற்கு ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். எமது மக்கள் அதை தான் விரும்புகிறார்கள். அதற்கு ஒத்துழைப்பு தர மறுக்கும் தமிழ் கட்சிகள் மக்களால் புறக்கணிக்கப்படும். மாற்றம் வேண்டும் ஊழலை ஒழிக்க வேண்டும் என நினைக்கும் சிங்கள தலைவர்களுக்கு ஒற்றுமை இல்லாத தமிழ கட்சிகளை மாற்றியமைக்க வேண்டும் என்பற்காக எங்களது மக்கள் வாக்களித்துள்ளார்கள். ஆனால் எமது மக்கள் எங்களோடு நிற்பார்கள். அவர்களுடைய விருப்பத்திற்கு ஏறப ஒரே அணியாக நிற்போம்.

ஜேவிபி நாடாளுடன்ற உறுப்பினர்கள் நாங்கள் என்ன செய்தோம் என எங்களை பார்த்து கூக்கிரல் இடுகிறார்கள். நான் கேட்கின்றேன். ஒரு பிரதி அமைச்சரை எங்களிடம் தாருங்கள். இரண்டு நாடாளுடன்ற உறுப்பினர்கள இருக்கின்றோம். உபாலி எதற்கு? தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு பதவியை பெற வேண்டும் என விரும்புகின்றோம். நாங்கள் முதுகெலும்பு உள்ளதால் அரசாங்கத்துடன இணையவில்லை. முதுசெலுப்பு இருந்தால் நீங்கள் அமைச்சு பதவி கேளுங்கள்.

ஆனால், அரசாங்கத்துடன வால் பிடிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கத்தின் அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு பதவி பெற்ற முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது மக்களுக்கு வளமான கிராமங்களை உருவாக்கியுள்ளார்கள். ஆனால் அரசாங்கத்திற்கு வால்பிடிக்காது இருப்பதால் எமது மக்களின் தமிழ் கிராமங்கள் பலவற்றன் தேவைகள் பூர்த்தி செய்யப்பவில்லை.

ஆகவே, அபிவிருத்தி தேவை. கொண்டு செல்வதற்கான அடித்தளம் இந்த சபைகள் ஊடாக வரும். அதற்காக அந்த சபைகளை தமிழர் தரப்பு கைப்பற்ற வேண்டும். தமிழ் கட்சிகளை விமர்சிக்காதீர்கள். சபைகளை கைப்பற்ற முயற்சி செய்யுஙகள் எனத் தெரிவித்தார். 100




# திவுரும்பொல ப்ரீமியர் லீக் விமரிசையாக நடந்தது!

(உமைர் மௌலானா)

திவுரும்பொலடீஎன்எஸ்ஸீவிளையாட்டுக்கழகம் மற்றும் டீ பீ எல் குழு இணைந்து நடத்திய திவுரும்பொல ப்ரீமியர் லீங் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நான்காவது தொடர் 19 மற்றும் 20 ம் திகதிகளில் திவுரும்பொல காசிம் முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு ஊர் தனவந்தர்ளின் அனுசரணையோடுமிகவும்சிறப்பாகநடைபெற்றதை அடுத்து டீ பீ எல் 2025 போட்டியில் சம்பியன் அணியாக சமீர்தலைமையிலானட்ரீம்கிரஷஸ்மற்றும் ரணஸ் அப் அணியாக சர்ஜுன் தலைமையிலனா ஜக்வர் அணியினரும் பெற்றுக்கொண்டனர்.

மேலும் இப்போட்டியின் ஆட்டநாயகனாக எம்.ஐ.ம் மிஷால் மற்றும் சிறப்பாட்டக்காரராக எம்.கே.எம் ஹிம்ஷான் ஆகியோறும் தமது திறமைகளைசிறப்பாகவெளிக்காட்டிகிண்ணங்களை சுவீகரித்துக் கொண்டனர்.







எம்.ஐ.ம் மிஷால் ஓர் ஹெட்ரிக் ஐயும் சிறப்பான பந்துவீச்சின் மூலம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

போட்டி சிறப்பாக நடைபெற்றதை அடுத்து போட்டி வர்ணனையாளறாக திவுரும்பொலையை சேர்ந்த பிரபல அறிவிப்பாளர் சாம் மௌலானா அவர்களும் மற்றும் சுஹைப் ஹசன்

அவர்கலோடு சிலாபம் பகுதியை சேர்ந்த ரவிந்துமதுசங்க மற்றும் அனுராதாராத்தை சேர்ந்த துளாஞ்சந்தருவன் அவர்களும் சேர்ந்து இக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை சிறப்பாக தொகுத்து வழங்கினர்.




இந்த போட்டி நிகழ்வுகள் அனைத்தும் திவுரும்பொல ப்ரீமியர் லீங் முகநூல் பக்கத்தின்ஊடாகநேரலையாகஒளிபரப்பப்பட்டதும் விஷேட அம்சமாகும்.



# உள்ளாட்சி தேர்தல் 2025

## வவுனியா மாநகர சோலைவரி 5 சதவீதமாகத் திருத்தப்படும்

### ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வாக்குறுதி

எதிர்வரும் தேர்தலில் நாம் வெற்றி பெறும் பட்சத்தில் மாநகரசபை அறிவித்துள்ள சோலைவரியை 5 சதவீதமாகக் குறைப்போம் என்று ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வவுனியா மாநகரசபை வேட்பாளரும் முன்னாள் நகரசபை உறுப்பினருமான சு.காண்டீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியா மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் ஆதன வரி 15 சதவீதமாக அறவிடப்பட்டு வருகின்றது. மாநகரத்தின் அபிவிருத்திக்கு வரி வருமானம் அவசியமாக இருந்தாலும் பொதுமக்கள் பாதிப்படையக்கூடிய வகையில் அதனை அறவிடுவது பொருத்தமற்ற ஒரு செயற்பாடாகவே உள்ளது.

குறிப்பாக போர் மற்றும் பல்வேறு காரணங்களால் வடக்கு மக்கள் பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ளனர். இந்த நிலையில் மெல்ல மீள் எழுச்சியடைந்து வரும் மக்களின் நிலை அறியாமல் திடீர் என வரி அதிகரிப்பை மேற்கொண்டுள்ளமை ஏற்கமுடியாத செயற்பாடு. எனவே அதனை மீளாய்வு செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மாநகரசபையின் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினால் குறித்த வரி அறவீட்டு நடவடிக்கை நிச்சயமாக திருத்தப்படும்.

குறிப்பாக தற்போது அறவிடப்படும் 15 சதவீத வரி அறவீட்டை 5 சதவீதமாக மாற்றுவதற்கான வலுவான தீர்மானம் ஒன்று என்னால் முன்னெடுக்கப்படும். அது நிச்சயம் அமுல்படுத்தப்படும் என்பதை கூறிக்கொள்ளகிறேன்.

கடந்த காலங்களில் மக்கள் எமக்கு அளித்த ஆணையை திறம்பட செயற்படுத்தியவர்கள் நாங்கள் என்ற ரீதியில் வட்டாரத்தின் அபிவிருத்திக்காக இம்முறையும் எமது கரங்களை மக்கள் பலப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். 100

## மாளிகைக்காடு மேற்கு வட்டார தேர்தல் காரியாலய திறப்பு விழா

(பாறுக் ஷிஹான்)

காரைதீவு பிரதேச சபை தேர்தலுக்கான ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் மாளிகைக்காடு மேற்கு வட்டார தேர்தல் காரியாலய திறப்பு விழா வேட்பாளர் எஸ்.எச்.எம்.சாஜித் தலைமையில் இடம்பெற்றது

இந்த நிகழ்வில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு கட்சியின் உப தலைவரும் தொழிலதிபருமான கலாநிதி ஹக்கீம் செரீப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தேர்தல் காரியாலயத்தை திறந்து வைத்தார்.

அங்கு உரையாற்றிய ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் உப தலைவர் தொழிலதிபர் கலாநிதி ஹக்கீம் செரீப் -

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு பிரதேச சபையில் இரண்டு ஆசனங்களை கைப்பற்றுவதற்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்தவர்கள் இதுவரை என்ன செய்திருக்கின்றார்கள்.அகில இலங்கை மக்கள் காங்கிரஸில் இருந்தவர்கள் எதைச் செய்தார்கள்.அவர்கள் உங்களுக்கு ஏதாவது ஒன்றை செய்திருந்தால் இங்கு நாங்கள் வரத் தேவையில்லை. உங்களது பெறுமதியான வாக்குகளை அவர்களுக்கு வழங்கி விட்டு இன்று எதை சாதித்து இருக்கிறீர்கள்எதையுமே சாதிக்கவில்லை.நாங்கள் எமது கட்சியின் சார்பாக இன்று இளைய தலைமுறைக்கு இடம் கொடுத்துள்ளோம். இந்த வட்டாரத்திற்கு ஓர் இளைஞனை களமிறக்கி இருக்கின்றோம். நாளை அந்த சாஜித் என்ற இளைஞன் காரைதீவு சபையில் இருக்கின்ற போது உங்களுக்காக குரல் கொடுப்பார்.

எனவே நீங்கள் அவரை ஆதரிக்க வேண்டும் .நாங்கள் கூறி உங்களுக்கு அவரை தெரிய வேண்டியது இல்லை. அவர் உங்களுடன் இருக்கின்றவர். உங்களுடன் வாழ்ந்து வருபவர். நாங்கள் எதிர்வரும் தேர்தலில் இரண்டு ஆசனங்களை காரைதீவு பிரதே சபையில் பெற்றுக் கொள்வது உங்கள் கைகளில் தான் இருக்கின்றது.இதற்காக வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் போராளிகள் முன்னெடுத்துவரும் களச் செயற்பாடுகளை முழு வீச்சுடன் முன்னெடுக்குமாறும், போலிப் பிரச்சாரங்களுக்கு கூட்ட மேடைகளில் தக்க பதில் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிகழ்வில் ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் இணைப்புச்செயலாளர் ஏஎம்.அகுவர் மாளிகைக்காடு கிழக்கு வட்டார வேட்பாளர் இளம் ஆளுமை சமூக செயற்பாட்டாளர் ஆர்.எம். தானிஸ் ரஹ்மதுல்லாஹ், வட்டாரங்களின் வேட்பாளர்கள் , கட்சி ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அரச ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை தேசிய மக்கள் சக்தி அரசு நிறைவேற்றிவருகிறது

### பிரபு எம்.பி. பெருமிதம்

(சக்திவேல்)



தேசிய மக்கள் சக்தி அரசு ஆகிய நாம், அரச ஊழியர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கட்டம் கட்டமாக நிறைவேற்றி வருகின்றோம் என மட்டக்களப்பு மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

கடந்த 39 வருடங்களாக மூடப்பட்டிருந்த சேற்றுக்குடா புதூர் வீதி இப்பகுதி மக்கள் விடுத்த வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி உத்தரவுக்கு அமைய தற்போது வீதியைத் திறந்து வைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நெடுஞ்சாலைகள் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க வீதி திறப்பதற்கான முன்னாயத்த களப்பணிகளை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நேரில் சென்று புதன்கிழமை பார்வையிட்டதன் பின் ஊடகங்களுக்கு இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த கால ஆட்சியாளர்களால் இந்த வீதி மூடப்பட்டிருந்தது சம்பந்தமாக எதுவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கவில்லை. இருப்பினும் நாம் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக தற்போது இந்த வீதி மக்களின் பாவனைக்காக திறக்கப்படும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனால் அரச ஊழியர்கள் பெரிதும் நன்மை அடைய உள்ளனர். எமது அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதற்காக இப்பகுதி மக்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

விமானப்படையினர் மற்றும் மாநகர சபை ஊழியர்களால் தற்போது இந்த வீதியை திறப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். - என்றார்.

## நாவிதன்வெளியில் சனியன்று தமிழரசு வேட்பாளர் அறிமுகம்

(சகாதேவராஜா)





இலங்கைதமிழரசுக்கட்சி நாவிதன்வெளி பிரதேச வேட்பாளர்கள் அறிமுகக்கூட்டமும் மாபெரும் பொதுக் கூட்டமும் கடந்த (19) சனிக்கிழமை நடைபெற்றது.

நாவிதன்வெளி பிரதேச இலங்கைத்தமிழரசுகட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வும் மாபெரும் பொது கூட்டமும் முன்னாள் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தலைமையில் நாவிதன்வெளி சுபமங்களா மண்டபத்தில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன்( கட்சியின் பதில் செயலாளர்), இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், டாக்டர் இ.சிறிநாத் மற்றும் கவி.கோடீஸ்வரன் ஆகியோர் பிரதான அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

கட்சியின் கல்முனைத் தொகுதி அமைப்பாளர் அநிதான்சன் உள்ளிட்ட கட்சி முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இ.ரூபசாந்தன், எஸ். சுதர்சன் உள்ளிட்ட வேட்பாளர்கள் அறிமுகம் இடம்பெற்றதோடு கட்சி மாலையும் அணிவிக்கப்பட்டது.

இடம்பெற்றது. கூடவே ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்

காலைக்கதிர் Kalaikkathir

# யாழ். மாவட்டத்தில் 292 நிலையங்களில் 21 ஆயிரம் பேர் தபால் மூல வாக்களிப்பு

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 292 வாக்களிப்பு நிலையங்கள் தபால் மூல வாக்களிப்புக்காக அமைக்கப்பட்டுள்ள நிலையில் 21 ஆயிரத்து 64 பேர் யாழ் மாவட்டத்தில்தபால்மூலமாகவாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாக யாழ் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் ஊடக சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்து ஊடகங்களுக்கு கருத்தினை தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தன்னுடைய கருத்தினை பதிவு செய்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 243 வட்டாரங்களில் தேர்தல் நடைபெற இருக்கின்றது.யாழ் மாநகர சபை ,மூன்று நகர சபைகள் ,13 பிரதேச சபைகளுக்குமாக 17 சபைகளுக்கு இந்த தேர்தல் நடாத்தபடவுள்ளது. இந்த தேர்தலுக்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயாராகிக்கொண்டிருக்கின்றது மொத்த வாக்களார் எண்ணிக்கையாக 4லட்சத்து 98ஆயிரத்து 140பேர் காணப்படுகின்றனர்.

இதேவேளை தபால் மூல வாக்களிப்பு நாளை மற்றும் நாளை மறுதினம் 24,25மற்றும் 27,28 ஆம் திகதிகளில் அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் நடாத்தபடவுள்ளது .

இதன்படி 292 வாக்களிப்பு நிலையங்களில் அஞ்சல்வாக்களிப்பு யாழ் மாவட்டத்தில் இடம்பெற காத்திருகின்றது. அதேவைளை வாக்களிப்பு கடமைகளுக்காக 292 அத்தாட்சி படுத்தல் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்மாவட்டத்தில்21ஆயிரத்து64பேர்வாக்களிக்க அஞ்சல்வாக்களிப்புக்காகதகுதிபெற்றுள்ளனர்.அஞ்சல் வாக்களிப்புக்காக விசேடமாக உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் பயிற்றுவிக்க பட்டுள்ளனர் .மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 28வலயங்கள் தெரிவுசெய்யபட்டு வலய செயற்பாடுகள் கையளிக்க பட்டுள்ளன.இதேவேளை மேற்பார்வை செயற்பாடுகளுக்காக 240உத்தியோகத்தர்கள் நியமக்கபட்டுள்ளனர் .இதன் மூலம் நீதியானதும் சுதந்திரமானதும் தேர்தல் நடாத்த நாம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம் . நான்கு நாட்கள் இடம்பெறவுள்ள தபால் மூல வாக்களிப்பு யாழில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவில் களைகட்டிய புத்தாண்டு விளையாட்டு

(சகாதேவராஜா)

விசுவாவசு சித்திரை வருடப்பிறப்பை முன்னிட்டும் காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் 42வது ஆண்டு நிறைவைசிறப்பிக்கும்முகமாகவும் காரைதீவுவிளையாட்டுக்கழகமும் விபுலாநந்தாசனசமுகநிலையமும் இணைந்து புறீஸீநு மற்றும் சொர்ணம் நகைமாளிகையினதும் இணை அனுசரணையுடன் நடாத்திய

'27வது மாபெரும் கலாசார விளையாட்டு விழா கழகத் தலைவர் எல்.சுரேஸ் தலைமையில் மிகவும் கோலாகலமாக கடந்த சனிக்கிழமையன்று நடைபெற்றது.

விழாவில் பிரதம அதிதியாக அம்பாறைமாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் கலந்து சிறப்பித்தார்.

பிரதான அனுசரணை வழங்கிய கல்முனை சொர்ணம் குழுமங்களின் ஸ்தாபக தலைவர் பிரபல நகை தொழிலதிபர் எம்.விஸ்வநாதன் கலந்துகொண்டு கல்விச் சாதனையாளர்களுக்கு பரிசுகளை வழங்கி வைத்தார். அவருடன்சொர்ணம்குழுமங்களின் கொழும்புக் கிளை சுந்தர் மற்றும் கல்முனைக் கிளை குணா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

பரிசளிப்புநிகழ்வில்அனுசரணை வழங்கிய அஸ்கோ நிறுவன செயலாளர் எஸ்.நந்தகுமார், கழக போசகர்ஓய்வுநிலைஉதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், தலைமை மருந்தாளர் ப.சந்திரமோகன், முன்னாள்தவிசாளர் கி. ஜெயசிறில் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி வைத்தனர்.

கபொத சா/த மற்றும் உ/தரத்தில் சாதனை படைத்த மாணவர்கள் மைதானத்தில் மத்தியில் பகிரங்கமாக பெற்றோர் சகிதம் கௌரவிக்கப்பட்டனர்.





# பொது மக்களின் அடிப்படை உரிமைகள் தேர்தலில் மீறப்பட்டால் முறையிடலாம்

## மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் தெரிவிப்பு

(சகாதேவராஜா)

கல்முனைப்பிராந்தியத்தில்உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் பொது மக்களின் அடிப்படை உரிமை மீறினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய ஆணைக்குழு அலுகலகத்தில் முறைப்பாடு செய்யுமாறு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.அப்துல் அஸீஸ் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில்தேர்தல்நடைபெறுவதற்கு முன்பும், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தலின் பின்னர் அரச, நிர்வாக, நிறைவேற்றுத் துறையினர் அடிப்படை உரிமையை மீறியதற்கான அல்லது மீறப்படுவதற்கான காரணங்கள் காணப்படுமாயின் முறைப்பாடு செய்ய முடியும்.

தேர்தல் காலத்தின் போது, தேர்தல் சட்டங்கள், நாட்டின் ஏனைய சட்டங்கள், நாட்டின் அரசியல் அமைப்பிற்கு இணங்க அந்தத் தேர்தல் நடாத்துப்படுவதனை உறுதி செய்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமைப்பட்டுள்ளனர். இது ஒவ்வொரு விடயத்திற்குப் பொறுப்பான அரச உத்தியோகத்தர்கள் அந்தச் சட்டங்களுக்கமைவாக தங்களது கடமைகளை நியாயமானதாகவும் பக்கச்சார்பின்றியும் செயற்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

1978ம் ஆண்டின் அரசியல் அமைப்பு யாப்பின்படி, மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை, சுதந்திரமாக அரசியலில் ஈடுபடும் உரிமை, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கானஉரிமைகளுடன்சட்டத்திற்கு முன் யாவரும் சமம் என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளது.

ஒவ்வொரு அரசஉத்தியோகத்தர்களும் அரசியல் அமைப்பிற்கு அமைவாக செயற்படுவதற்கு உறுதிமொழி செய்துள்ளனர். அரசஉத்தியோகத்தர்கள் கொண்டுள்ள சட்ட ரீதியான கடமைகளையும், பொறுப்புக்களையும் தவறாகப் பயன்படுத்துதல் அல்லது நடவடிக்கை மேற்கொள்ளாமல் விடல் பக்கச்சார்பாக செயற்படல் அரசியல் அமைப்பு யாப்பின் அடிப்படை உரிமையினை மீறும் செயலாகும்.

அவ்வாறு மீறுகின்ற சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக 1996ம் ஆண்டின் 21ம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு புலனாய்வுகள் மற்றும் விசாரணைகளை நடாத்துவதற்கும் அவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு என தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# சமூக வலுவூட்டல் தொடர்பாக தேசிய வேலைத்திட்ட பயிற்சி

(சர்ஜூன் லாபீர்)

சமூக வலுவூட்டல் தொடர்பான தேசிய வேலைத்தின் அடிப்படையில் அஸ்வசும பயனாளிகளுக்கும், குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைத் தெளிவூட்டும் திட்டமிடல் மற்றும் அறிக்கை தொடர்பான பயிற்சி நெறி செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சம்மாந்துறை பிரதேச செயலக சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைன் அவர்களின் நெறிப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தலின் அடிப்படையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஹம்சார், சமுர்த்தி பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் மற்றும் உதவி முகாமையாளர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வுக்கு இறக்காமம் பிரதேச செயலக வங்கி முகாமையாளர் எம்.நஜிப் வளவாளராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.













# பெண்கள் சுகநல நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா

(சுபேசன்)

பெண்கள் சுகநல நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்வு இன்று (புதன்கிழமை) காலை 10.30 மணிக்கு முதலாம் குறுக்குத் தெரு பெண்கள் சுகநல நிலையம் யாழ் போதனா வைத்தியசாலை எனும் முகவரியில் இடம்பெற்றது.

இதன்போது புகைப்படத் தொகுதி திறப்பு வைபவம், பெண்கள் சுகநல நிலையம் பற்றிய அறிமுகம், கருத்தரிப்பு சிக்கல்கள் கொண்ட தம்பதியினரின் அனுபவப் பகிர்வு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

மேற்படி நிகழ்விற்கு யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் கலாநிதி ஆறுதிருமுருகன் ஆகியோரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2025இல் வெளியிடப்பெற்றது